***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 179/2019 – P.W. 5 (LW2)***

| | |
|---|---|
| *Name* | காஷ்மீர் ஜோசப் ராஜ் |
| *Father/Husband's Name* | முனியப்பன் |
| *Village* | மணல்மேல்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 45 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 12.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மன்னார்குடி செயின்ட் ஜோசப் பள்ளியில் PT ஆசிரியராக வேலை செய்து வருகிறேன்.

கடந்த 08.12.2018ம் தேதியன்று மாலை 07.00 மணியில் இருந்து 07.30 மணியளவில் நான் பணியில் இருக்கும் மன்னார்குடி செயின்ட் ஜோசப் பள்ளிக்கு எதிரே உள்ள பழக்கடையில் நானும், எனது நண்பரான அருண்குமார் என்பவரும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது என்னுடன் வேலை செய்யும் ராணி என்பவரது கணவரான சுரேஷ் இருச்சக்கர வாகனத்தில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி அந்த ரோட்டில் சென்றுக்கொண்டிருந்தார். அப்போது அவர் சென்ற திசையிலேயே பின்னால் ஒரு டாடா ஏசி வாகனம் மிகுந்த வேகத்துடனும், கண்பின் தெரியாமல் வந்து அவரின் இருச்சக்கர வாகனத்தின் பின்னால் இடித்துவிட்டது. அந்த வாகனம் மோதியதில் இவர் முன்னால் இருந்த swift வாகனத்தில் மோதிவிட்டார். நாங்கள் இருவரும் ஓடிபோய் பார்த்தோம். அவருக்கு உடல் முழுவதும் அடிப்பட்டு இருந்தது. மூக்கில் இருந்து இரத்தம் வந்தது. பின்னர் உடனடியாக அவரது மனைவிக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன். பின்னர் அந்த வழியாக வந்த ஆட்டோவில் அவரை ஏற்றிக்கொண்டு மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர் பரிசோதித்து விட்டு அசா.1ன் கணவர் வரும் வழியிலேயே

இறந்துவிட்டதாக கூறினார். அசா.1ன் கணவர் வந்த வாகனத்தில் பின் பக்கம் இடித்து விபத்தை ஏற்படுத்திய டாடா ஏசி வாகனத்தை ஓட்டிவந்தவர் ஆஜர் எதிரிதான். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நேரம் 07.00 to 07.30 என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகே கடைகள், மருத்துவமனைகள், பள்ளி, கல்லூரிகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தை நான் சத்தம் கேட்டு தான் ஓடி வந்து பார்த்தேன் என்றால் பழக்கடையில் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன்.

நான் தான் மருத்துவமனைக்கு விபத்தில் காயம்பட்டவரை அழைத்து சென்று சேர்த்தேன் என்றால் ஆமாம். விபத்து பதிவேட்டில் சம்பவ இடமானது ராஜாத்தி சூப்பர் மார்க்கெட் அருகே என்று தான் உள்ளது என்றால் சரிதான். அது பழக்கடைக்கு பக்கத்தில் தான் உள்ளது. இந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் speed break உள்ளதா என்றால் சம்பவ இடத்தை அடுத்து தான் speed break உள்ளது.

அருண்குமார் நான் போன் செய்து தான் அந்த இடத்திற்கு வந்தார் என்றால் இல்லை. நாங்கள் இருவரும் அந்த இடத்தில் தான் இருந்தோம். அடிப்பட்டவர் பெயர் சுரேஷ என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் அவரது பெயர் என்ன என்று ஞாபகம் இல்லை.

நான் சொல்வது போல் இந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரி ஓட்டிவந்த வாகனத்தை இறந்து போனவர் கவனக்குறைவாக இடது புறமாக முந்தி செல்லும் போது எதிரி வாகனத்தின் மீது மோதி மீண்டும் அருகில் இருந்த காரில் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 179/2019 – P.W. 6 (LW3)***

| | |
|---|---|
| *Name* | அருண்குமார் |
| *Father/Husband's Name* | ஜெயபிரகாஷ் |
| *Village* | மீமீசல் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 45 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 12.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மன்னார்குடியில் மருந்து கம்பெனி வைத்துள்ளேன்.

கடந்த 08.12.2018 ம் தேதியன்று மாலை 07.30 மணியளவில் நானும், காஷ்மீர் ஜோசப் ராஜ் என்பவரும் செயின்ட் ஜோசப் மெட்ரிக் கான்வென்டிற்கு எதிரே உள்ள அழகர்சாமி பழக்கடையில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது விபத்தில் இறந்த செந்தில் வேலன் என்பவர் அவரது இருச்சக்கர வாகனத்தில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருந்தார். அவருக்கு பின்னால் வந்த தினதந்தி பேபர் போடும் வாகனமான டாடா ஏசி ஜிப் என்ற வாகனம் மிகுந்த வேகத்துடனும், ஹாரன் அடிக்காமலும், அஜாக்கிரதையாகவும் வந்து முன்னால் சென்ற செந்தில்வேலன் வாகனத்தின் மீது மோதி முன்னால் நின்ற மாருதி காரின் மீது மோதி நச்சியது. அதில் செந்தில்வேலன் உடல் முழுவதும் பலத்த காயம் அடைந்தார். மூக்கில் இருந்து இரத்தம் வழிந்தது. அவர் சம்பவ இடத்திலேயே இறந்திருப்பார் என்று நினைக்கிறேன். உடனடியாக காஷ்மீர் ஜோசப் ராஜ் அவருடைய மனைவிக்கு போன் மூலமாக தகவல் கூறினார். அந்த வழியாக வந்த டாடா ஏசி லோடு வாகனத்தில் அவரை ஏற்றிக்கொண்டு மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு அவரை மருத்துவர் பரிசோதித்து விட்டு

இறந்து விட்டதாக கூறினார். விபத்தை ஏற்படுத்திய டாடா ஏசி ஜிப் வாகனத்தை ஓட்டி வந்தது ஆஜர் எதிரி தான். சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

சம்பவ இடத்திற்கு அருகில் கடைகள், மருத்துவமனைகள், பள்ளி, கல்லூரிகள் உள்ளது என்றால் சரிதான். இறந்து போனவர் எனக்கும், காஷ்மீர் ஜோசப் ராஜ்க்கும் நண்பர் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு இருபுறமும் speed break உள்ளது என்றால் சம்பவ இடத்தை அடுத்து தான் speed break உள்ளது. ஜோசப் தகவல் கொடுத்து தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் இல்லை நாங்கள் இருவரும் நின்று பேசிக்கொண்டிருந்தோம்.

பொதுவாக அந்த இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். அதனால் அந்த இடத்தில் வேகமாக செல்லமுடியாது என்றால் இல்லை. அவர் வேகமாக தான் வந்தார்.

நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரி ஓட்டிவந்த வாகனத்தில் இறந்துபோனவர் இடது புறமாக கவனக்குறைவாக முந்திசெல்லும் போது எதிரியின் வாகனத்தின் மீது மோதி மீண்டும் அருகில் இருந்த வாகனத்தில் மோதி தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ நடந்தவுடன் டாடா ஏசி வாகனத்தை போட்டுவிட்டு ஓடுவிடுகிறார் என்றால் ஆமாம். அதனால் தற்போது தான் முதன் முதலாக பார்க்கிறேன் என்றால் இல்லை. அவர் இறங்கி ஓடும்போது பாரத்தேன். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.